# Telephone Conversation between PM and Prime Minister of Spain

April 04, 2020

## பிரதமர் மற்றும் ஸ்பெயின் பிரதம மந்திரி இடையேயான தொலைபேசி உரையாடல்.

ஏப்ரல் 04,2020

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி, ஸ்பெயின் நாட்டின் மேன்மை பொருந்திய பெட்ரோ சாஞ்சேஸ் பெரேஸ் –காஷ்டஜென்,அரசாங்க ஜனாதிபதி (பிரதம மந்திரிக்கு நிகரானது) இன்று தொலைபேசி உரையாடல் நிகழ்த்தினார். Covid-19 தொற்றுநோயினால் உலகளவில் ஏற்பட்ட சவால்களைப் பற்றி விவாதித்தனர்.

பிரதமர் ஸ்பெயினில் ஏற்பட்ட துயரமான உயிரிழப்புகளுக்கு தனது ஆழ்த்த இரங்கலை தெரிவித்ததுடன் மற்றும் விரைவாக பூர்ண நலம் பெற தனது பிரார்த்தனைகளையும் தெரிவித்தார். வீரம் நிறைந்த ஸ்பானிஷ் முயற்சிகளுக்கு இந்தியா ஒற்றுமையுடன் நிற்கிறது என்றும், அதன் திறனுக்கு ஏற்றவாறு ஆதரவை தரத் தயாராக இருப்பதாகவும் பிரதமர் ஸ்பானிய பிரமுகருக்கு உறுதியளித்தார்.

உலகளாவிய சுகாதார நெருக்கடியை எதிர்த்து போராடுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். Covid க்கு பிந்தைய சகாப்தத்திற்கான உலகமயமாக்கல் பற்றிய புதிய, மனித மையப்படுதப்பட்ட கருத்தை உலகம் வரையறுக்க வேண்டும் என்ற பிரதமரின் கவனிப்புடன் ஸ்பெயின் பிரதமர் உடன்பட்டார்.

தொற்றுநோயால் தங்கள் வீடுகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் உளவியல் மற்றும் உடல் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்கான எளிதில் அணுகக்கூடிய வழிகளை வழங்குவதற்காக யோகா மற்றும் பாரம்பரிய மூலிகை மருந்துகளின் பயன்பாடு குறித்து இரு தலைவர்களும் உடன்பட்டனர்.

வளர்ந்து வரும் Covid-19 நிலைமை மற்றும் அதிலிருந்து வெளிவரும் தேவைகள் குறித்து தங்கள் அணிகள் தொடர்ந்து தொடர்பில் இருக்கும் என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

**நியூ டெல்லி**
**ஏப்ரல் 04, 2020**

DISCLAIMER : This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.